பாடம்-11

## இயேசுவின் மரணமும் உயிர்த்தெழுதலும்

இயேசுவின் வாழ்க்கை வரலாற்றில் மிகவும் முக்கியமான சம்பவங்கள், அவருடைய மரணமும் உயிர்த்தெழுதலும்.

## இயேசு ஏன் மரித்தார்?

இயேசு உலகில் இருந்தபோது அடிக்கடி திரளான ஜனங்கள் அவர் பின் சென்றுகொண்டேயிருந்தார்கள். ஒரு முறை பெண்களும் குழந்தைகளும் தவிர புருஷர்கள் மட்டும் 5000 பேர் அவர் பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தனர். அவர் மரிப்பதற்கு ஒருவாரத்திற்கு முன்பு அவர் எருசலேமிற்குள் நுழையும்போது ஜனங்கள் அவரைத் துதித்துப்பாடி வாழ்த்தினார்கள்.

அப்படியானால் அவர் ஏன் மரித்தார்? அவர் போதித்த கருத்துகள் ஒரு காரணம். மனிதர்களுடைய பாவங்களைக் கடிந்து கொள்ள அவர் அஞ்சவில்லை. அவர் வெளிப்படையாக எல்லாவற்றையிம் கூறினார். (மத் 23) யூதர்களை தேவன் தன்னுடைய பிள்ளைகளாக இனிமேல் ஏற்கமாட்டார் என்றும், யூதர்களல்லாதவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்றும் போதித்தார் (மத் 21:43; மத் 8:11-12). தான் பிதாவுக்கு சமமானவர் என்றும் தன்னைக்குறித்துக் கூறினார் (யோ 5:18). இதனால் யூதர்கள் கோபமடைந்தனர். மனிதர்கள் இயேசுவைப் பகைத்ததால் இயேசு மாண்டார். இருப்பினும் அவரைப் பகைத்தவர்களுக்காகவே அவர் மாண்டார்.

## அருடைய மரணம்

இயேசுவின் உயிர் நண்பர்களில் ஒருவனான யூதாஸ் காரியோத் என்பவன் இயேசுவை அவருடைய விரோதிகளுக்கு விற்க தீர்மானித்தான். இயேசுவைப் பிடித்துக் கொடுத்தால் அதற்கு 30 வெள்ளிக்காசுகள் தருவதாக விரோதிகள் யூதாஸிடம் கூறினார்கள். ஒரு நாளிரவு இயேசு ஜெபம் செய்து கொண்டிருக்கும்போது யூதாஸ் விரோதிகளை அழைத்து வந்து அவருக்கு முத்தம் செய்ததின்மூலம் இவர்தான் இயேசு என்று காட்டிக் கொடுத்தான். இந்தக் காரியத்தைச் செய்ததால் யூதாஸ் கவலைப்பட்டு பின்னால் தற்கொலை செய்துகொண்டான்.

## அவர் விசாரிக்கப்படுவதும், சிலுவையில் அறையப்படுவதும்

இயேசு தன் வாழ்க்கையில் ஒருதவறு கூட செய்யாமலிந்தபோதிலும் விரோதிகள் அவரை விசாரணைக்கூண்டில் நிறுத்தினார்கள். மனிதர்கள் அவரைக் குறித்துப்பொய் பேசி அவருக்கு மரணதண்டனை விதிக்க வைத்துவிட்டார்கள். அவர் விசாரிக்கப்படும்போது அவர் கன்னத்தில் அறையப்பட்டார், முகத்தில் துப்பப்பட்டார் ஏளனம் செய்யப்பட்டார். அடிக்கப்பட்டார். இவ்வளவு கொடுமைப்படுத்தப்பட்டும் இயேசு அமைதியாய் இருந்தார். (1 பேதுரு 2:22-25).

இறுதியாக அவர் சிலுவையில் அறையப்படும்படி அழைத்துச் செல்லப்பட்டார். அவரை சிலுவையில் வைத்து கைகளிலும், கால்களிலும் ஆணிகளால் அடித்தார்கள், பின் சிலுவையைத் தூக்கி நிறுத்தி அவரைக் கேலி செய்தார்கள்.

## இயேசுவின் அடக்கம்

இயேசு மரித்த பின்பு அவருடைய சரீரத்தை அவரது நண்பர்கள் அடக்கம் செய்வதற்காக எடுத்துக் சென்றார். அரிமாத்தியா ஊரானாகிய யோசேப்பு என்பவன் தனது கல்லறையை இயேசுவை அடக்கம் செய்யும்படி கொடுத்தான். இயேசு சரீரத்தைக் கல்லறையிலிருந்து யாரும் திருடிக் கொண்டு போகாதபடி கல்லறையைச் சுற்றி யூதர்கள் காவலாளிகளை நிறுத்தினார்.

## அவருடைய உயிர்த்தெழுதல்

ஆனால் எந்த சக்தியுமே இயேசுவைக் கல்லறையில் வைத்திருக்க முடியவில்லை. ஞாயிற்றுக்கிழமை காலையில் இயேசுவின் நண்பர்கள் கல்லறைக்கு வந்தனர். கல்லறை திறக்கப்பட்டிருந்தது. இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார். இயேசு தேவனுடைய குமாரன் என்று எல்லா மனிதர்கட்கும் அறிவிக்கும் பொருட்டு தேவன் அவரை உயிரோடு எழுப்பினார். 40 நாட்கள் கழித்து இயேசு தேவனோடு இருக்கும்படி பரமேறிச் சென்றார். இயேசு இன்றும் ஜீவிக்கிறார். அவர் ஜீவனுள்ள இரட்சகர்.